# Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 146/18

## Deposition of P.W.6

| | | |
|---|---|---|
| Name | : | சிவநாதன் |
| Father's Name | : | ஆறுமுகம் |
| Village | : | நம்பிவயல் |
| Religion | : | இந்து |
| Age | : | **52/2022** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 06.10.2022**

**முதல் விசாரணை**

நான் கறம்பக்குடியில் வசித்து மளிகைகடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 ராணி என்பவரை எனக்கு தெரியும். இவ்வழக்கின் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். 17.06.2007ம் தேதி ஊரணிபுரம் கே.ஆர் அம்சவள்ளி திருமண மண்டபத்தில் வைத்து அ.சா.1 ராணிக்கும் 1வது எதிரி புண்ணியமூர்த்திக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னர் அ.சா.1 ராணியும் 1வது எதிரியும் சென்னையில் குடியிருந்தார்கள். அ.சா.1 ராணியிடம் எதிரி புண்ணியமூர்த்தி அடிக்கடி அதிகமாக பணம் கேட்கிறார் என்று பிரச்சனை ஏற்பட்டதாகவும் அதனால் எதிரி புண்ணியமூர்த்தி விவாகரத்து கேட்டு சென்னையில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். 05.12.2016ம் தேதி எதிரி புண்ணியமூர்த்தி குடிகாட்டை சேர்ந்த நீலா என்ற பெண்ணை திருமணம் செய்தார். அந்த நாளில் ஜெயலலிதா இறந்துவிட்டதால் போக்குவரத்து இல்லாமல் இருந்தது. அதனால் நான் அந்த திருமணத்திற்கு போகவில்லை. அதன்பின்னர் அ.சா.1 ராணி ஆலங்குடி மகளிர் காவல்நிலையத்தில் 1வது எதிரியின் 2வது திருமணம் பற்றி புகார் அளித்திருந்தார். இதுசம்மந்தமாக பின்னர் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 146/18

**Deposition of P.W.5**

| | | |
|---|---|---|
| Name | : | ரவிக்குமார் |
| Father's Name | : | கருப்பையா |
| Village | : | கறம்பக்குடி |
| Religion | : | இந்து |
| Age | : | **52/2022** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 06.10.2022**

**முதல் விசாரணை**

நான் கறம்பக்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ராணி என்பவரையும் இவ்வழக்கின் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். 17.06.2007ம் தேதி ஊரணிபுரம் கே.ஆர் அம்சவள்ளி திருமண மண்டபத்தில் வைத்து அ.சா.1 ராணிக்கும் 1வது எதிரி புண்ணியமூர்த்திக்கும் திருமணம் நடந்தது. பெண்வீட்டார்சார்பில் எனக்கு அழைப்பிதழ் கொடுத்ததில் நான் கலந்துகொண்டேன். திருமணத்திற்கு பின்னர் அ.சா.1 ராணியும் 1வது எதிரியும் சென்னையில் குடியிருந்தார்கள். அ.சா.1 ராணியிடம் எதிரி புண்ணியமூர்த்தி அடிக்கடி அதிகமாக பணம் கேட்கிறார் என்று பிரச்சனை ஏற்பட்டதாகவும் அ.சா.1 ராணியும் எதிரி புண்ணியமூர்த்தியும் பிரிந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். 05.12.2016ம் தேதி எதிரி புண்ணியமூர்த்தி குடிகாட்டை சேர்ந்த லீலா என்ற பெண்ணை திருமணம் செய்வதாக அழைப்பிதழ் ஒன்று பார்த்தேன். அதன்பின்னர் அ.சா.1 ராணி ஆலங்குடி மகளிர் காவல்நிலையத்தில் 1வது எதிரியின் 2வது திருமணம் பற்றி புகார் அளித்திருந்தார். அதனால் பேச்சுவார்த்தைக்கு எதிரி புண்ணியமூர்த்தியும் அவரது உறவினர்களும் வந்திருந்தனர். அப்போது காவல்நிலையத்திற்கு வெளியே நடந்த பேச்சுவார்த்தையில் நானும் கலந்துகொண்டேன். அதில் எதிரி புண்ணியமூர்த்தியை விட்டு அ.சா.1 ராணி விலகிக்கொள்ளுமாறு புண்ணியமூர்த்தி 2வது திருமணம் செய்த பெண்ணோடு வாழவிருப்பதாகவும் பேசினார்கள். அதற்கு அ.சா.1 ராணி ஒத்துக்கொள்ளவில்லை. இதுசம்மந்தமாக பின்னர் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள். என்னையும் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.